


**09.03.2025**

## தலைப்பு செய்திகள்

1. **செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்** மகளிருக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்குவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. **நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2-வது** அமர்வு நாளை தொடங்குகிறது.

3. **தமிழக மீனவர் பிரச்சனைக்கு சுமுக தீர்வு** எட்ட இலங்கை அரசுடன் தொடர்பேச்சுவார்த்தைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய அமைச்சர் டாக்டர் **L.**முருகன் தெரிவித்துள்ளார்.

4. **தமிழகத்தில் 7 ஆயிரத்து 196 கோடி ரூபாய்** மதிப்பிலான கோவில் நிலங்கள் மீட்கப்பட்டு உள்ளதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

5. **துபாயில் ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட்** இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

**பிரதமர்**

**செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்** மகளிருக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்குவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இன்று அவர் வெளியிட்ட செய்தியில் பல்வேறு பிரிவுகளில் செயற்கை நுண்ணறிவு மகளிர் மேம்பாட்டிற்கு துணைபுரிவதாக கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் சமூகத்தில் மகளிரின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி. சாவித்ரி தாகூர் தெரிவித்திருந்ததை சுட்டிக்காட்டிய பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

**முன்னதாக பிரதமர் வெளியிட்ட மற்றொரு** செய்தியில் நாட்டில் வன உயிரின பன்முகத்தன்மை அதிகரித்து வருவதாக மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

58-வது புலிகள் சரணாலயம் மத்திய பிரதேச மாநிலத்தில் தொடங்கப்பட்டதை சுட்டிக்காட்டிய பிரதமர் வனவிலங்குகளை பாதுகாக்கும் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

**நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2-வது அமர்வு நாளை தொடங்கி அடுத்தமாதம் 4-ம் தேதி வரை நடைபெறுகிறது.

20 அமர்வுகளாக நடைபெறும் இந்த கூட்டத்தொடரில் 2025-26-ம் ஆண்டிற்கான மானிய கோரிக்கைகள் மீதான விவாதங்கள் இடம்பெறும்

வங்கி, கடலோர கப்பல் போக்குவரத்து, ரயில்வே திருத்த மசோதாக்கள் மீதான விவாதங்களும் இக்கூட்டத்தொடரில் இடம்பெறும்.

இதனிடையே கடந்த ஜனவரி 31-ம் தேதி தொடங்கி பிப்ரவரி 13-ம் தேதிவரை நடைபெற்ற முதல்கட்ட கூட்டத்தொடரில் மக்களவையில் 112 சதவிகித அலுவல்கள் நடைபெற்றதாக நாடாளுமன்ற விவகாரத்துறை தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

**திமுக தீர்மானம்**

**இதனிடையே நாளை தொடங்கும் நாடாளுமன்ற** 2-ம் கட்ட அமர்வில் திமுக உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாடுகள் குறித்து கட்சி தலைவரும், முதலமைச்சருமான திரு.மு.க. ஸ்டாலின் தலைமையில் சென்னையில் இன்று ஆலோசனை கூட்டம் நடைபெற்றது

❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

**தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட** வேண்டியதன் அவசியத்தை மத்தியதகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் **L.** முருகன் வலியுறுத்தியுள்ளார்.

செங்கல்பட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பெண்களின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும் என்றார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு மீனவர்களின் மேம்பாட்டிற்கு 40 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கியுள்ளதாக தெரிவித்த அவர், தமிழக மீனவர் பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான தொடர்பேச்சுவார்த்தைகள் இலங்கை அரசுடன் நடைபெறுவதாக கூறினார்.

அனைவருக்கும் குடிநீர், இலவச சமையல் எரிவாயு இணைப்பு உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

❖❖❖❖❖❖

**அனுப்பிரியா பட்டேல்**

நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏற்கத்தக்க வகையில் உயர்தர சுகாதார சேவைகளை வழங்க மத்திய அரசு உறுதிப்பூண்டுள்ளதாக மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லி தேசிய சுகாதார நிறுவனத்தின் 48-வது ஆண்டுதின நிகழ்ச்சியில் பேசியஅவர், ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளை வழங்குவதில் புதிய மைல்கல் எட்டப்பட்டுள்ளதாக கூறினார்.

நாட்டில் தற்போது 22 எய்ம்ஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் செயல்படுவதாகவும், 2014-ல் 380 ஆக இருந்த அரசு மருத்துவக் கல்லூரிகள் தற்போது 787 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖

**ஆயுஷ்மான் பாரத்திட்டம்**

**நாட்டில் இணையவழி உணவு விற்பனை பிரதிநிதிகள்** உள்ளிட்ட சாலையோர வியாபாரிகள் பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் இணைந்து பயன்பெறுமாறு மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

நாடுமுழுவதும் 31 ஆயிரம் மருத்துவமனைகளில் இத்திட்டத்தின்கீழ் 5 லட்சம் ரூபாய் வரையிலான உயர்தர மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

❖❖❖❖❖❖

**அன்பூர்ணா தேவி**

**நியூயார்க்கில் 69-வது சர்வதேச மகளிர் ஆணைய கூட்டம்** நாளை தொடங்குகிறது.

இந்தியா சார்பில் மத்திய மகளிர் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்பூர்ணா தேவி, இதில் பங்கேற்கிறார்.

மகளிர் மற்றும் குழந்தைகளின் ஆளுமையை அதிகரிப்பதற்கான இந்தியாவின் ஒருங்கிணைந்த முயற்சிகள் குறித்து இக்கூட்டத்தில் அவர் எடுத்துரைக்க உள்ளார்.

மகளிர் சுகாதாரம், நலவாழ்வு, கல்வி, மின்னணு மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பு, மகளிர் தொழில்முனைவோர்களை ஊக்குவித்தல் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**தமிழகத்தில் 7 ஆயிரத்து 196 கோடி ரூபாய்** மதிப்பிலான கோவில் நிலங்கள் மீட்கப்பட்டு உள்ளதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், மாநிலத்தின் பல்வேறு திருக்கோவில்களில் 24 ஆயிரத்து 572 பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

220 திருக்குளங்கள், 120 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டு வருவதாக கூறியஅவர், இதுவரை 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருக்கோவில்களில் குடமுழுக்கு நடைபெற்றதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**முதலமைச்சர் வாழ்த்து**

சாகித்ய அகாடமி விருதுக்கு தேர்வாகியுள்ள நெல்லையை சேர்ந்த திருமதி. விமலாவிற்கு, முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இன்று அவர் வெளியிட்ட செய்தியில், மொழிபெயர்ப்பு பிரிவில் விருதுபெற்ற விமலாவின் பணிகள் தொடர வாழ்த்தியுள்ளார்.

எனது ஆண்கள் மொழிபெயர்ப்பு நூலுக்காக இவ்விருது பெறுவது ஊக்கமளிப்பதாக திருமதி விமலா எமது செய்திபிரிவிடம் தெரிவித்துள்ளார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**சி.பி.ராதாகிருஷ்ணன்**

**நாட்டில் அனைத்து மாநிலங்களுக்கும்** பொதுவானதாக தேசிய கல்விக்கொள்கை உருவாக்கப் பட்டுள்ளதாக பி.ஜே.பி. மூத்த தலைவரும், மஹாராஷ்டிர ஆளுநருமான திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மும்மொழிக் கொள்கையில் 3-வது மொழியாக எந்த மொழியை வேண்டுமானாலும் கற்கலாம் என்று ஹிந்தி திணிக்கப்படவில்லை என்றும், தெளிவுப்படுத்தினார்.

❖❖❖❖❖❖

**ஜி.கே.வாசன்**

**தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு மற்றும் மகளிர்** பாதுகாப்பை உறுதிசெய்வதுடன் போதைப்பொருட்கள் பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென தமிழ்மாநில காங்கிரஸ் தலைவர் திரு.ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியார்களிடம் பேசியஅவர் மக்களவை மறுசீரமைப்பு குறித்து மத்திய அரசு அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடாத நிலையில், இவ்விஷயத்தில் தி.மு.க. குழப்பத்தை ஏற்படுத்துவதாக குற்றம்சாட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖

**பறவைகள்**

**தமிழகத்தில் பறவைகள்** கணக்கெடுக்கும் பணி 2-வது நாளாக இன்றும் நடைபெறுகிறது.

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயத்தில் நீர்வாழ் பறவைகள் கணக்கெடுப்பு பணியில் 50-க்கும் மேற்பட்ட வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

நாகை கோடியக்கரை பறவைகள் சரணாலயத்தில் வெளிநாட்டு பறவைகள் கணக்கெடுப்பு பணியில் 10 குழுக்களாக, 60 பேர் ஈடுபட்டுள்ளனர்.

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர், கூத்தைப்பார், கிளியூர், கள்ளிக்குடி, துறையூர் உள்ளிட்ட 20 இடங்களில் இப்பணிகள் நடைபெறுகின்றன.

இதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுசீந்திரம், தேரூர், அச்சன்குளம் உள்ளிட்ட 25 இடங்களில் நீர்வாழ் பறவைகள் கணகெடுப்பு பணியில் 90 பேர் ஈடுபட்டுள்ளதாக மாவட்ட வனஅலுவலர் எமது செய்தியாளரிடம் தெரிவிக்கையில்

.. **வாய்ஸ்** ..

நெல்லை மாவட்டத்திலும் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், அம்பை வனக்கோட்டம் உள்ளிட்ட பகுதிகளில் இப்பணிகள் இன்று நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖

**விழுப்புரம் வாய்ஸ்**

**விழுப்புரத்தில்** ஐ.டி.ஐ. படித்த மாணவர்கள் தொழில்பயிற்சி பெறுவதற்கான தேர்வுமுகாம் நாளை நடைபெறுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

இருவரி

**எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை** கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட பாம்பன் மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை விடுவிக்க வலியுறுத்தி பாம்பன் பகுதி மீனவர்கள் இன்று வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் குடும்ப அட்டையில்** உள்ள உறுப்பினர்கள் வரும் 31-ம் தேதிக்குள் அருகில் உள்ள நியாயவிலை கடைகளில் கைவிரல் ரேகை பதிவேற்றம் செய்யவேண்டுமென ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ்பச்சாவ் தெரிவித்துள்ளார்.

**தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த** 60 லட்சம் ரூபாய் மதிப்பிலான புகையிலையை **Q** பிரிவு காவல்துறையினர் பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாக 3 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

**திருச்சி - இலங்கை யாழ்பாணம் இடையேயான விமான** போக்குவரத்து வரும் 30-ம் தேதி தொடங்குகிறது.

இந்த நேரடி விமான போக்குவரத்தின் மூலம் இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் மற்றும் பயணியர் போக்குவரத்து சேவைகள் மேம்படும்.

**சிவகங்கை மாவட்டம் கீழடி திறந்தவெளி** அருங்காட்சியகத்தில் இன்றுமுதல் பார்வையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே பரவக்கல்** கன்னி கோவிலில் தேனீக்கள் கொட்டியதில் ஒருவர் உயிரிழந்தார்.

காயமடைந்த 10 பேர் **குடியாத்தம்** அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖

கிரிக்கெட்

**துபாயில் நடைபெறும் ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை** கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பிற்பகல் இரண்டரை மணிக்கு நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

2 முறை சாம்பியன் பட்டம் வென்ற இந்தியா 3-வது முறையாக பட்டத்தை கைப்பற்றும் என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர்.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**